உணவு பாதுகாப்புத்துறை அதிரடி உத்தரவு

பேப்பரில் பஜ்ஜி, போண்டா மடித்து கொடுக்கக்கூடாது

- சிக்கன்-65, கோபி-65 போன்றவற்றில் செயற்கை நிறமிகள் சேர்க்கக்கூடாது
- 14 வழிகாட்டு நெறிமுறைகள் வெளியீடு

சென்னை, ஜூன் 5: பேப்பர் போன்ற அச்சிட்ட காகிதங்களில் பஜ்ஜி, போண்டா போன்ற உணவுப் பொருட்களை பரிமாற கூடாது என்பது உள்ளிட்ட 14 வழிகாட்டு நெறிமுறைகளை தமிழக உணவு பாதுகாப்புத் துறை வெளியிடப் பட்டுள்ளது.

உணவகங்களில் பின்பற்ற வேண்டிய 14 வழிகாட்டு நெறிமுறைகளை தமிழக உணவு பாதுகாப்புத் துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றாமல் உணவு விற்பனை செய்தாலோ அல்லது தயாரித்தாலோ உணவக உரிமையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உணவு பாதுகாப்பு சட்டத்தின்படி உணவகத்தின் உரிமம் ரத்து செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, உணவு பாதுகாப்புத்துறை வெளியிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகள் வருமாறு:

1 அனைத்து உணவு வணிகர்களும் https://foscos.fssai.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பித்து, உணவு பாதுகாப்பு உரிமம் அல்லது பதிவுச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

2 அனைத்து உணவு வணிக நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு டைபாய்டு மற்றும் மஞ்சள் காமாலை உள்ளிட்ட நோய்களுக்கு எதிராக தடுப்பூசி செலுத்தி, மருத்துவத் தகுதி சான்றிதழ் வைத்திருக்க வேண்டும்.

3 உணவு வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் தண்ணீரைப் பகுப்பாய்வு செய்து, பகுப்பாய்வ றிக்கை வைத்திருக்க வேண்டும்.

4 உணவுப் பொருட்களை ஈக்கள்/ பூச்சிகள் மொய்க்காதவண்ணம் கண்ணாடி பெட்டியில் மூடி வைத்து காட்சிப்படுத்த வேண்டும்.

5 உணவு எண்ணெயை ஒருமுறை மட்டுமே சமைக்க பயன்படுத்த வேண்டும். மீதமான பயன்படுத்திய உணவு எண்ணெயை, உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (FSSAI) அங்கீகரித்த கொள்முதலாளருக்கு மட்டும் விற்க வேண்டும்.

6 விற்பனையாகாமல் மீதமான உணவை நுகர்வோருக்கு வழங்காமல் அப்புறப்படுத்திட வேண்டும்.

7 நியூஸ் பேப்பர் போன்ற அச்சிட்ட காகிதங்களில் உணவுப் பொருளில் நேரடியாக படும் வகையில் பரிமாறவோ/ பொட்டலமிடவோ கூடாது.

8 அனுமதிக்கப்படாத நெகிழியில் (பிளாஸ்டிக்) உணவுப் பொருட்களை சூடாகவோ அல்லது இயல்பு நிலையிலோ பொட்டலமிடக் கூடாது.

9 உணவகங்களில் உணவு பரிமாற வாழை இலை அல்லது அனுமதிக்கப்பட்ட பார்ச்மெண்ட் பேப்பர்/அலுமினியம் பாயில் மட்டுமே பயன்படுத்த வேண்டும். அனுமதிக்கப்படாத நெகிழியினை (பிளாஸ்டிக்) பயன்படுத்தக் கூடாது.

10 எவ்வகை உணவு எண்ணெய்களையும் லேபிள் விவரங்களின்றியும் பொட்டலமிடாமல் சில்லரை அடிப்படையிலும் நுகர்வோருக்கு விற்பனை செய்தல் கூடாது.

11 உணவைக் கையாளுபவர்கள் கையுறை மற்றும் தலைமுடி கவசம் போன்றவற்றை தவறாமல் அணிய வேண்டும்.

12 பொட்டலமிடப்பட்ட உணவுப் பொருட்களை கொள்முதல் விற்பனை செய்யும் போது, உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் உரிம எண்ணுடன் கூடிய முழுமையான லேபிள் விவரங்கள் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

13 உணவு சமைக்க மற்றும் நொறுக்குத் தீனிகள் தயாரிக்க அயோடின் கலந்த உப்பு மட்டுமே பயன்படுத்த வேண்டும். உணவகங்கள்/பேக்கரி/இனிப்பகங்கள் உள்ளிட்ட உணவு நிறுவனங்களில் அயோடின் கலக்காத உப்பு இருக்கக்கூடாது.

14 சிக்கன்-65, பஜ்ஜி, கோபி-65 போன்ற உணவுப் பொருட்களில் செயற்கை நிறமிகள் சேர்க்கக்கூடாது.

இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளது.

மேலும் உணவு பாதுகாப்பு குறித்தான புகார்களுக்கு 9444042322 என்ற எண்ணுக்கு அல்லது தமிழக உணவு பாதுகாப்புத் துறை செயலியை பயன்படுத்தலாம்.

சார்பதிவாளர் அலுவலகங்களில்

இன்றும் நாளையும் கூடுதல் டோக்கன்கள் விநியோகம்

சென்னை, ஜூன் 5: சுபமுகூர்த்த தினங்கள் என கருதப்படும் நாட்களில் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் என்பதால் அன்றைய தினங்களில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஆவணப்பதிவுக்காக கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. தற்போது வைகாசி மாதத்தின் மங்களகரமான தினங்களான ஜூன் 5ம் தேதி மற்றும் ஜூன் 6ம் தேதி ஆகிய நாட்களில் அதிகளவில் பத்திரப் பதிவுகள் நிகழும் என்பதால் கூடுதலாக முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யுமாறு பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

இதை ஏற்று, வைகாசி மாதத்தின் மங்களகரமான தினங்களான ஜூன் 5ம் தேதி மற்றும் ஜூன் 6ம் தேதி ஆகிய நாட்களில் ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 முன்பதிவு வில்லைகளும் இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200க்கு பதிலாக 300 முன்பதிவு வில்லைகளும் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 சாதாரண முன்பதிவு வில்லைகளோடு ஏற்கனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு வில்லைகளுக்கு கூடுதலாக 4 தட்கல் முன்பதிவு வில்லைகளும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளத என பதிவுத்துறை தெரிவித்துள்ளது.

முதல்வர் தலைமையில் ஆலோசனை கூட்டம்

▶ செங்கல்பட்டு மாவட்டம், கடம்பூர் கிராமத்தில் உலக தரத்தில் அமைக்கப்பட உள்ள பல்லுயிர் பாதுகாப்பு பூங்கா குறித்து, சென்னை தலைமை செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று ஆலோசனை கூட்டம் நடந்தது. இதில், அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, ராஜகண்ணப்பன், தலைமை செயலாளர் முருகானந்தம், சுற்றுச்சூழல் துறை செயலாளர் சுப்ரியா சாகு, நிதி துறை செயலாளர் உதயச்சந்திரன், தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரிய முதன்மை செயல் அலுவலர் பூஜா குல்கர்னி உள்ளிட்ட அதிகாரிகள்.

ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படும்

பண்டிகை கால முன்பணம் ரூ.6 ஆயிரமாக உயர்வு

அரசு உத்தரவு

சென்னை, ஜூன் 5: ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படும் பண்டிகை கால முன்பணம் ரூ.4 ஆயிரத்தில் இருந்து ரூ.6,000 ஆக உயர்த்தி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து தமிழக அரசின் நிதித்துறை செயலாளர் உதயச்சந்திரன் நேற்று வெளியிட்டுள்ள அரசாணையில் கூறி இருப்பதாவது:

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பின்படி தமிழ்நாடு அரசு மாநில சிவில் மற்றும் ஆசிரியர் ஓய்வூதியதாரர்களின் பண்டிகை கால முன்பணம், ரூ.4 ஆயிரத்தில் இருந்து ரூ.6 ஆயிரமாக உயர்த்தி வழங்க அரசு ஆணையிடுகிறது. இந்த உயர்வால் சுமார் 52 ஆயிரம் ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவர். இதனால் அரசுக்கு ரூ.10 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும்.

அதேபோன்று, பொங்கல் பண்டிகைக்கு முன்னாள் கிராம பணியமைப்பு உள்பட சி மற்றும் டி பிரிவு ஓய்வூதியதாரர்கள், அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் மற்றும் அனைத்து குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் வழங்கப்படும் பரிசு தொகை ரூ.500ல் இருந்து ரூ.1000 ஆக உயர்த்தி வழங்கி அரசு ஆணையிடுகிறது. இதன்மூலம் சுமார் 4 லட்சத்து 70 ஆயிரம் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள்.

இந்த பண்டிகை முன்பணம், 10 மாதங்களுக்கு சமமான தவணைகளில் பிடித்தம் செய்யப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

சட்டமன்ற தேர்தல் தொடர்பாக நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்த திட்டம்

வரும் 8ம் தேதி அமித்ஷா மதுரை வருகிறார்

சென்னை, ஜூன் 5: ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா வரும் 8ம் தேதி மதுரை வருகிறார். பேரவை தேர்தல் தொடர்பாக நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தவும், பொதுக்கூட்டத்தில் பங்கேற்கவும் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழக சட்டப்பேரவை தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ளது. இதை யொட்டி, தமிழக அரசியல் கட்சிகள் தேர்தல் பணிகளை தீவிரப்படுத்தி வருகின்றன. திமுக தேர்தல் பணிகளை தீவிரப்படுத்தியுள்ளதோடு, ஏற்கனவே கூட்டணி அமைத்த கட்சிகளுடன் முழு பலத்தோடு களம் காண்கிறது. பாஜவோடு கூட்டணியை முறித்திருந்த அதிமுக மீண்டும் கூட்டணியை உறுதி செய்துள்ளது. கடந்த 2021 சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளுடன் கூட்டணி அமைத்து போட்டியிடவும் அதிமுக திட்டமிட்டு காய் நகர்த்தி வருகிறது.

இந்நிலையில், ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா ஜூன் 8ம் தேதி மதுரை வர உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்த பயணத்தின் போது பாஜவின் தென் மாவட்டங்களை சேர்ந்த முக்கிய நிர்வாகிகளை சந்தித்து ஆலோசனை நடத்த உள்ளதாக தெரிகிறது. ஏற்கனவே மதுரையில் திமுக பொதுக்குழு கூட்டம் மிக பிரமாண்டமாக நடைபெற்றது. மேலும்,

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மதுரையில் 16 கி.மீ. தொலைவுக்கு 'ரோடு ஷோ' சென்று மக்களை சந்தித்தார்.

இந்த சூழ்நிலையில், ஒன்றிய உள்துறை அமைச்சர் வரும் 8ம் தேதி மதுரைக்கு வருகிறார். மதுரை ஒத்தக்கடையில் அமித்ஷா பங்கேற்கும் பொதுக்கூட்டமும் நடைபெற உள்ளதாகவும் கூறப்படுகிறது.

மதுரை வருகையின் போது கூட்டணி மற்றும் தேர்தல் சம்பந்தமாக பல்வேறு முக்கிய முடிவுகளை எடுக்க உள்ளதாகவும் தெரிகிறது. கடந்த மாதம் ஒன்றிய உள்துறை அமித்ஷா சென்னை வந்த போது, அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் மற்றும் முன்னாள் முதல்வர் ஓபிஎஸ் ஆகியோரை சந்திக்கவில்லை. ஆனால் பாஜவினர் அமமுக மற்றும் ஓபிஎஸ் ஆகியோரும் என்டிஏ கூட்டணியிலேயே இருப்பதாக கூறி வருகின்றனர். தங்களை அமித் ஷா சந்திக்காதது வருத்தம் என்பதையும் ஓபிஎஸ் வெளிப்படையாகவே கூறியிருந்தார். ஆனால் எடப்பாடிக்கு ஓபிஎஸ் மற்றும் டிடிவி தினகரனை சேர்த்து கொள்ளும் எண்ணம் இல்லை என்றே கூறப்படுகிறது. அவர் அடுத்தக்கட்ட தேர்தல் பணிகளை பார்க்க தொடங்கியுள்ளார்.

இந்நிலையில் மதுரை பயணத்தின் போது ஓபிஎஸ் மற்றும் டிடிவி தினகரன் உள்ளிட்டோரை அமித் ஷா சந்திப்பார் என்று பாஜவினர் மத்தியில் பேச்சு அடிபடுகிறது. அதேபோன்று பேரவைத் தேர்தலில் பாஜ போட்டியிடும் இடங்கள் தொடர்பான முடிவினை எடுக்கவும் அமித்ஷா ஆலோசிக்க வாய்ப்புகள் உள்ளதாக சொல்லப்படுகிறது.

பாரில் கண்ணாடி, மதுபாட்டில்களை உடைத்து ரகளையில் ஈடுபட்ட விவகாரம்

அஜய் வாண்டையாரின் நெருங்கிய கூட்டாளி புனேவில் கைது

சென்னை, ஜூன் 5: நுங்கம்பாக்கத்தில் பாரில் போதையில் நடனமாடும் போது ஏற்பட்ட தகராறில் கண்ணாடி, சேர்கள் மற்றும் மதுபாட்டில்களை உடைத்து ரகளையில் ஈடுபட்ட வழக்கில், கடந்த 13 நாட்களாக தலைமறைவாக இருந்த உணவக உரிமையாளரும் அஜய் வாண்டையாரின் கூட்டாளியான ராஜா என்பவரை தனிப்படை போலீசார் புனேவில் கைது செய்தனர்.

சென்னை திருவான்மியூர் பகுதியை சேர்ந்த ராஜா. இவர் ஈசிஆரில் தூண்டில் என்ற பெயரில் உணவகம் நடத்தி வருகிறார். ராஜா கடந்த 22ம் தேதி இரவு தனது நண்பர்களான அதிமுக தொழில் நுட்பபிரிவு நிர்வாகி பிரசாத்(33), கணேஷ் குமார்(42), தனசேகரன்(29) உள்ளிட்டோருடன் நுங்கம்பாக்கம் பகுதியில் உள்ள பிரபல தனியார் பாரில் மது அருந்தி கொண்டிருந்தார். அப்போது இசைக்கு ஏற்றபடி பலர் நடனமாடி கொண்டிருந்தனர். இதை பார்த்து போதையில் இருந்து ராஜா, வயதான காலத்தில் இது தேவையா என நடனமாடுபவர்களை பார்த்து கேலி, கிண்டல் செய்துள்ளார். அப்போது பக்கத்து இருக்கையில் மது அருந்தி கொண்டிருந்த செல்வபாரதி என்பவர் அதை தட்டிக் கேட்டுள்ளார். இதனால் ராஜாவுக்கும் செல்வபாரதிக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. ராஜா தனது நண்பர்களுடன் சேர்ந்து செல்வபாரதி தரப்பை கடுமையாக தாக்கினர். அதோடு இல்லாமல் போன் செய்து

அதிமுக நிர்வாகியான அஜய் வாண்டையார் மற்றும் ரவுடி சுனாமி சேதுபதி உதவியுடன் ரவுடி கும்பலை வரவழைத்து பாரை அடித்து நொறுக்கினர்.

இதுகுறித்து பார் மேலாளர் வெங்கட்குமார் நுங்கம்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து இரண்டு தரப்புகள் மீதும் வழக்கு பதிவு செய்தனர். ஆனால் தூண்டில் உணவக உரிமையாளர் ராஜா மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதை அறிந்த அஜய் வாண்டையார் மற்றும் ரவுடி சுனாமி சேதுபதி ஆகியோர் நுங்கம்பாக்கம் காவல் நிலையத்திற்கு நேரில் சென்று இன்ஸ்பெக்டரை பணி செய்யவிடாமல் ராஜா மீது போடப்பட்ட வழக்கை திரும்ப பெற கோரி மிட்டியுள்ளனர்.

இது குறித்து உயர் காவல்துறை அதிகாரிகள் கவனத்திற்கு சென்றதும், அஜய் வாண்டையார், ரவுடி சுனாமி சேதுபதி ஆகியோரை தனிப்படையினர் தேனியில் கைது செய்தனர். பிறகு அதிமுக தொழில் நுட்ப பிரிவு நிர்வாகி பிரசாத், கணேஷ்குமார், தனசேகர் ஆகியோரை சென்னையில் கைது செய்தனர்.

இந்த வழக்கில் முக்கிய குற்றவாளியான தூண்டில் உணவக உரிமையாளர் ராஜா, சந்தோஷ், தீபக் ஆகியோர் தலைமறைவாகிவிட்டனர். இதையடுத்து அவர்களை பிடிக்க நுங்கம்பாக்கம் உதவி கமிஷனர் மற்றும் இன்ஸ்பெக்டர் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டது. தனிப்படையினர் அவர்களின் செல்போன் மற்றும் உறவினர்கள் செல்போன் சிக்னல்கள் உதவியுடன் விசாரணை நடத்திய போது, ராஜா புனே பகுதியில் நண்பர்கள் உதவியுடன் பதுங்கி இருப்பது தெரியவந்தது. தனிப்படை போலீசார் விமானம் மூலம் புனே சென்று அங்கு தலைமறைவாக இருந்த ராஜாவை அதிரடியாக நேற்று கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட ராஜாவை தனிப்படையினர் சென்னைக்கு அழைத்து வருகின்றனர். ராஜா நடத்தும் உணவகத்தில் தான் தென் மாவட்டங்களில் கொலை மற்றும் ஆள் கடத்தல் வழக்குகளில் போலீசார் தேடி வரும் ரவுடிகளுக்கு அடைக்கலம் கொடுத்து வந்துள்ளார். அவரது உணவகத்தில் தான் தென் மாவட்டங்களில் எந்த தொழிலதிபர்களை மிரட்டி பணம் பறிப்பது, கொலை செய்வது குறித்து திட்டம் வகுத்து நடைமுறைப்படுத்தியதாக, அஜய் வாண்டையார் உடன் கைது செய்யப்பட்ட ராமநாதபுரத்தை சேர்ந்த ரவுடி சுனாமி சேதுபதி போலீசாரிடம் அனைத்து விபரங்களையும் வாக்குமூலமாக தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

இதனால் ராஜாவுக்கும், சிறையில் உள்ள அஜய் வாண்டையார் மற்றும் ரவுடி சுனாமி சேதுபதிக்கும் உள்ள தொடர்புகள் என்ன? இதுவரை எத்தனை கொலைகளுக்கு ராஜாவின் உணவகத்தில் திட்டம் வகுக்கப்பட்டது. இதன் பின்னணியில் உள்ள நபர்கள் யார் யார் என்பது குறித்து கைது செய்யப்பட்ட ராஜா, அவரது கூட்டாளியான அஜய் வாண்டையார், ரவுடி சுனாமி சேதுபதி ஆகியோரிடம் விசாரணை நடத்த போலீசார் முடிவு செய்துள்ளனர்.

பொறியியல் படிப்புகளுக்கு விண்ணப்பிக்க நாளை கடைசி

சென்னை,ஜூன் 5: தமிழ்நாடு பொறியியல் சேர்க்கைக்கான விண்ணப்பப் பதிவு கடந்த மே மாதம் 7ம் தேதி தொடங்கப்பட்டது. விருப்பம் உள்ள மாணவ-மாணவிகள் www.tneaonline.org என்ற இணையதள முகவரியில் விண்ணப்பித்து வருகின்றனர்.

பொறியியல் நேற்று மாலை நிலவரப்படி 2 லட்சத்து 90 ஆயிரத்து 678 மாணவ-மாணவிகள் விண்ணப்பப் பதிவு செய்துள்ளனர். இதில் 1லட்சத்து 27 ஆயிரத்து 337 மாணவர்களும், 1 லட்சத்து 05 ஆயிரத்து 395 மாணவிகளும் என மொத்தம் 2 லட்சத்து 32 ஆயிரத்து 732 பேர் விண்ணப்பக் கட்டணம் செலுத்தி உள்ளனர். விண்ணப்ப பதிவு செய்வதற்கு வருகிற 6ம் தேதி (நாளை) கடைசி நாளாகும். எனவே பொறியியல் சேர்க்கைக்கான தங்களது விண்ணப்பங்களை விரைவில் பதிவு செய்துகொள்ளுமாறும், விண்ணப்ப பதிவு செய்தவர்கள் தங்களது சான்றிதழ்களை 9ம் தேதிக்குள் பதிவேற்றம் செய்யுமாறும்

அறிவுறுத்தப்பட்டுள்ளது. கூடுதல் விவரங்களுக்கு 1800 425 0110 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் வாயிலாகவோ தொடர்பு கொண்டு தங்களது சந்தேகங்களை தெளிவுபடுத்திக்கொள்ளலாம்.

அரசு பஸ்களில் டிக்கெட் முன்பதிவு புதிய உச்சம்

மே மாதம் 7.74 லட்சம் பயணிகள் முன்பதிவு

சென்னை, ஜூன் 5: அரசு பேருந்துகளில் மே மாதத்தில் மட்டும் 7 லட்சத்து 74 ஆயிரத்து 496 பயணிகள் முன்பதிவு செய்துள்ளனர்.

விடியல் பயண திட்டம் அமல்படுத்தியதை அடுத்து பெண்கள் இலவசமாக மகிழ்ச்சியாக பேருந்துகளில் சென்று வருகிறார்கள். இந்த திட்டம் தொடங்கப்பட்டது முதல் இது வரை ஏழு போக்குவரத்துக் கழகங்கள் மூலம் 440 கோடி விடியல் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் தினசரி 51 லட்சம் பெண்கள் கட்டணமில்லா பேருந்து பயணங்கள் மூலம் பயனடைந்து வருகிறார்கள். அதுமட்டுமல்லாது தீபாவளி, பொங்கல், ரம்ஜான், கிறிஸ்துமஸ் போன்ற பண்டிகை நாட்களிலும் பொதுமக்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு மகிழ்ச்சியாக செல்வதற்காக கூடுதலாக சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. இப்படி முக்கிய பண்டிகை மட்டுமல்லாது வார விடுமுறை நாட்களில் கூட கூடுதல் பேருந்துகள் இயக்கப்படுகிறது.

மேலும் தனியார் பேருந்துகளுக்கு நிகராக எஸ்இடிசி பேருந்துகளில் அனைத்து வசதிகளும் தற்போது உள்ளது. மேலும் உடனுக்கு உடன் முன்பதிவும் செய்ய முடிகிறது. இதனால் பொதுமக்கள் அரசு பேருந்துகளை விரும்பி பயணம் மேற்கொள்கிறார்கள். 2025ம் ஆண்டு மே மாதத்தில் மட்டும் ஆன்லைன் முன்பதிவு திட்டத்தில் 7 லட்சத்து 74 ஆயிரத்து 496 பயணிகள் முன்பதிவு செய்து பயணம் மேற்கொண்டுள்ளனர். இதற்கு முன்பு கடந்த ஜனவரி மாதத்தில் 6 லட்சத்து 64 ஆயிரத்து 632 பயணிகள் பயணம் மேற்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த முன்பதிவு தற்போது அதிகரித்துள்ளது.

GRIHUM HOUSING FINANCE — Apna Ghar. Apni Pehchan.

க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது)

பதிவு அலுவலகம்: 6-வது தளம், B கட்டிடம், கங்கா ட்ரூனோ, லோஹிகான், புனே, மகாராஷ்டிரா 411014. கிளை அலுவலகம் அலகு: 2ஆவது தளம், Rj பிளாசா, எண் 5, காட்பாடி பிரதான சாலை, பாலாறு மேம்பாலம் அருகில், விருதம்பட்டு, வேலூர்.

மின்-ஏலம்-விற்பனை அறிவிப்பு
சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 & 9-ன் கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் (முன்னதாக பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது. பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயர் க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2023 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது (முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று அறியப்பட்டது முன்னர் GE மணி ஹவுசிங் பைனான்ஸ் பப்ளிக் அன்லிமிடெட் கம்பெனி என்ற பெயருடைய நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) (இதற்குப்பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று சட்டத்தின்படி குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 பிரிவு 13(2)-ன் படியும், கடனீட்டு சொத்துகளின் உரிமை (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 & 9-ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்துள்ளார்.

கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 10.06.2025 அன்று மின்-ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன்மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்-ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள இணைப்பில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்-ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்துகொள்ள GHFL's/ கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com-ஐ பார்வையிடவும்.

வ. எண்	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் {A}	கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் நிலுவைத் தொகை {B}	சுவாதீனத் தன்மை {C}	சொத்தின் விவரம் {D}	நிர்ணய விலை {E}	முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையில் 10%) {F}	முன்வைப்புத் தொகை செலுத்தும் {G}	ஏல உயர்வுத் தொகை {H}	சொத்து பார்வையிடும் தேதி மற்றும் நேரம் {I}	ஏலம் விடும் தேதி மற்றும் நேரம் {J}	தெரிந்த வில்லங்கங்கள்/ நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் {K}
1	HM0111H17100474 ஏழுமலை மனோகரன் (கடன்தாரர்), E வசந்த் (உப கடன்தாரர்)	அறிவிப்பு தேதி: 15.11.2021 மொத்த நிலுவை: 15.11.2021 தேதிப்படி செலுத்த வேண்டிய தொகை ரூ.1019055/- (ரூபாய் பத்து லட்சத்து பத்தொன்பதாயிரத்து ஐம்பத்தைந்து மட்டும்) மற்றும் தொகையைச் செலுத்தும் வரையிலான ஆண்டுக்கு @13.50% வட்டி உட்பட.	கையக	அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட அடகு வைக்கப்பட்டுள்ள சொத்து. பழைய SF எண் 15/1, 15/2, மனை எண் 121, லபைமாங்குப்பன் கிராமம், குப்புசாமி கவுண்டர் நகர், ஆம்பூர் தாலுகா, வேலூர், வேலூர் மாவட்டம், அஞ்சல் குறியீடு 635805.	Rs. 1115000/- (ரூபாய் பதினொரு லட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்)	Rs. 111500/- (ரூபாய் ஒரு லட்சத்து பதினோராயிரத்து ஐந்நூறு மட்டும்)	20.06.2025 மாலை 5 மணிக்கு முன்பு	10,000/-	14/06/2025 (11AM – 4PM)	21/06/2025 (11 AM- 2PM)	ஏதுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/ கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச் சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்துகொள்ள அருகில் உள்ள கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்துவரி, மின்சாரம்/ வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் பயனாளர் அடையாள முகவரி, கடவுச்சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிட்., முகவரி: மனை எண்-68, 3ஆவது தளம், குர்கான், ஹரியானா-122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண். 9948182222 மூலமாகவோ தொடர்புகொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அதன்பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்-ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக "க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிட்." வங்கிக் கணக்கில், ICICI BANK LTD, கணக்கு எண்-000651000460 மற்றும் IFSC Code- ICIC0000006, 20, R.N.முகர்ஜி சாலை, கொல்கத்தா-700001 என்ற கிளையில் செலுத்தத்தக்க விதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது அட்டவணை வங்கியிலோ **20.06.2025 தேதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும்.** மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் பெயரை முன்னதாகவே பதிவுசெய்து கட்டணமில்லா மின்-ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச்சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அதன்பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூலப் பிரதியை 2ஆவது தளம், Rj பிளாசா, எண் 5, காட்பாடி பிரதான சாலை, பாலாறு மேம்பாலம் அருகில், விருதம்பட்டு, வேலூர் என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். மேலும் கைபேசி எண். +91 9597907666 மின்னஞ்சல் முகவரி baskaran.soundarrajan@grihumhousing.com-ல் தொடர்பு கொள்ள வேண்டும். மின்-ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்துகொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com-ஐ பார்வையிடவும். கடனீட்டு சொத்துகளின் உரிமை (அமலாக்கம்) சட்டம்-2002-ன் விதி 8(6)-ன் கீழ் கடன்தாரர்/ உப கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 15 நாட்கள் அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

தேதி: 05.06.2025, இடம்: வேலூர்
ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி, க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது)